*மே 24, 2015*

**ஸ்மிருத்தி அல்லது நினைவு செய்ய வேண்டியது**

*இனிமையான குழந்தாய்: நீங்கள் வெற்றி கொடி பறக்க விடுவதற்கு முக்கியமான விஷயம் புரிந்துணர்வாகும். நீங்கள் தந்தையுடன் அனைத்து உறவுகளையும் கொண்டுள்ளதை கேட்பது அல்லது சொல்லுவது ஒன்று, ஆனால் நீங்கள் ஒவ்வொரு உறவுமுறைகளிலும் அனுபவம் அல்லது ப்ராப்தியில் மூழ்கி இருக்கும் போது, நீங்கள் எளிதாக பழைய உலகின் சூழலுக்கு அப்பால் இருக்க முடியும். தியானம் செய்வதென்றால், தந்தையிடமிருந்து ஒத்துழைப்பை எடுப்பதும் தந்தையுடன் வெவ்வேறு உறவுமுறைகளில் ஒவ்வொரு தருணத்திலும் அனுபவம் செய்வதாகும். தந்தை எந்த தருணத்திலும் எந்த உறவுமுறையிலும் அவரது கடமையை நிறைவேற்றுவதற்கு கட்டுப்பட்டுள்ளார்.*

இனிமையான பாபா, நான் உங்களிடம் ஒத்துழைப்பு எடுத்துக்கொள்வது கூட யோகத்தின் ஒரு வடிவம் என நினைவு செய்வேன். நான் இன்றைய நாள் பொழுதில் உங்களுடன் அப்பாவாக, அம்மாவாக, நெருக்கமான நண்பராக மற்றும் அன்பிற்குரியவராக வெவ்வேறான உறவுமுறைகளை அனுபவம் செய்வேன். இன்று நான் செய்யும் ஒவ்வொரு பணியிலும் ஒரு வித்தியாசமான உறவை அனுபவம் செய்வேன். உங்களிடம் பெறும் ஒத்துழைப்பின் மூலமே, நான் தொடர்ந்து நிலையான தியானத்தை அனுபவம் செய்வேன்.

**சமார்த்தி அல்லது சக்தி**

நான் தொடர்ந்தும் மேலே கொடுக்கப்பட்டிருக்கும் ஸ்மிருத்தியிலிருந்து பெறப்படும் சக்தியின் இணைப்பில் என்னை நான் வைத்திருக்கின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எனக்கு எவ்வாறு என்னுடைய சுய-மரியாதையை மீண்டும் ஆற்றல் மிக்கதாகச் செய்கின்றது என்பதைப் பற்றி நான் விழிப்படைகின்றேன். என்னுடைய ஸ்மிருத்தி எவ்வாறு எனக்குப் பலமளிக்கின்றது, மேலும் எப்போதும் மாறிக்கொண்டிருக்கும் உலகில், சீரான மனநிலையோடும் பொறுமையுடனும் செயல்பட என்னை அனுமதிக்கின்றது என்பதிலும் நான் கவனம் செலுத்துகின்றேன்.

**மனோ-விருத்தி அல்லது மனோபாவம்**

*பாபா ஆத்மாவிற்கு: 'அடைய வேண்டியதை எல்லாம் அடைந்து விட்டேன்' என்ற ஒலி பெரும் மகிழ்ச்சியுடன் உங்கள் இதயத்திலிருந்து வெளிப்படுகிறதா? உதடுகள் வழியாக ஒலி நிலையானதாக இருக்க முடியாது, ஆனால் இதயத்தின் ஒலி எப்போதும் ஆதியானது. அதனால் அனைத்தையும் அடைந்துவிட்டதற்கான ஒலி உங்கள் இதயத்திலிருந்து வெளிப்பட்டதா? அது உங்கள் இதயத்தின் ஆழத்திலிருந்து வெளிப்பட்டதா, அல்லது நீங்கள் இன்னும் ஏதாவது அடைவதற்கு உள்ளதா அல்லது நீங்கள் இன்னும் ஏதாவது அடைந்து கொண்டுள்ளதாக நினைக்கிறீர்களா?*

நான் இந்த மனோபவத்தை மேற்கொள்வதில் உறுதியாக இருக்கிறேன்: நான் அடைய வேண்டியதை, எல்லாம் அடைந்து விட்டேன்.

**திருஷ்டி அல்லது தூய பார்வை**

*பாபா ஆத்மாவிற்கு: ஒவ்வொரு நகையின் மதிப்பை பற்றி ஒரு நகைவியாபாரிக்கு தெரிவது போல், தந்தைக்கு ஒவ்வொரு குழந்தையின் மகத்துவம் வாய்ந்த தன்மை/பெருந்தன்மையும் தெரிகிறது. ஒவ்வொரு நகையும் அடுத்தவற்றை விட அதிஉயர்ந்ததாகும். நீங்கள் சாதாரணமாணவர் இல்லை. கடைசி மணி கூட சாதாரணமானதில்லை.*

நான் ஒவ்வொருவரும் கொண்டுள்ள பரிசுகளை பார்ப்பதில் உறுதியாக இருக்கிறேன். என்னுடைய திருஷ்டியில், நான் பார்க்கின்ற மற்றும் தொடர்பு கொண்டுள்ள ஒவ்வொரு ஆத்மாவும், மிகவும் உயர்ந்தவர்கள் என்ற தோற்றத்தை வைத்திருக்கிறேன்.

**ஒர் அலையை உருவாக்குதல்**

**நான் மாலை *7:00* மணி முதல் *7:30* மணி வரை தியானத்தின் போது முழு உலகையும் தூய நினைவு மற்றும் மனோபாவத்தினால் நிரப்பும் ஒர் அழகான அலையை உருவாக்கும் மன்சா சேவையைச் செய்வேன். நான் மேலே கொடுக்கபட்டிருக்கும் ஸ்மிருத்தி, மனோ-விருத்தி, மற்றும் திருஷ்டியின் மூலம், முழு உலகிற்கும் சாக்காஷ் கொடுப்பதிலும் ஒரு கருவியாக என்னை ஈடுபடுத்திக்கொள்வேன்.**